# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்: ____________

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **1** | **30** | | | |
| **2** | **10** | | | |
| **3** | **10** | | | |
| **4** | **10** | | | |
| **5** | **15** | | | |
| **6** | **05** | | | |
| **7** | **20** | | | |
| மொத்தப் புள்ளிகள் | **100** | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 30 ☐ ஆ) 100 ☐
இ) 18 ☐ ஈ ) 20 ☐

2. விசும்பு என்பது

அ) வானம் ☐ ஆ) பூட்கை ☐
இ) ஓம்பல் ☐ ஈ ) துன்பம் ☐

3. சொற்களின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

அ) எதுகை ☐ ஆ) உவமை ☐
இ) உருவகம் ☐ ஈ ) மோனை ☐

4. இலங்கைக்கு விடுதலை கொடுத்த நாடு

அ) போர்த்துக்கல் ☐ ஆ) பிரித்தானியா ☐
இ) ஒல்லாந்து ☐ ஈ ) பிரான்சு ☐

5. நுதல் என்பது

அ) கழல் ☐ ஆ) கண் ☐
இ) கழுத்து ☐ ஈ ) நெற்றி ☐

6. ஆரியர் இந்தியத் துணைக்கண்டத்தினுள் நுழைந்தபொழுது அங்கு வாழ்ந்த இனம்

அ) ஆரியர் ☐ ஆ) பறங்கியர் ☐
இ) சிங்களவர் ☐ ஈ ) பழந்தமிழர் ☐

7. மதிமுகம் என்பது

அ) உவமைத்தொகை ☐ ஆ) வினைத்தொகை ☐

இ) அன்மொழித்தொகை ☐ ஈ) பண்புத்தொகை ☐

8. ஒவ்வொரு பெரும் பொழுதும் __________ திங்களைக் கொண்டது.

அ) 3 ☐ ஆ) 5 ☐

இ) 4 ☐ ஈ) 2 ☐

9. உயிர்முன் உயிர்புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பலாச்சுளை ☐ ஆ) பூஞ்சோலை ☐

இ) மாவிலை ☐ ஈ) கற்குகை ☐

10. எலும்புந்தோலும் என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

11. **குறள்:** நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் __________ தரும்

அ) இடும்பை ☐ ஆ) ஒழுக்கம் ☐

இ) விழுப்பம் ☐ ஈ) அச்சம் ☐

12. காலங்காட்டாதது

அ) எச்சவினை ☐ ஆ) தெரிநிலைவினை ☐

இ) குறிப்புவினை ☐ ஈ) குறைவினை ☐



TEDC

13. ‘எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்’ என்னும் பாடலை எழுதியவர்

அ) தாமரைக்கண்ணன் ☐ ஆ) அம்பி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ ) மன்னார்அமுதன் ☐

14. அஃறிணை ஒருமைக்கு எடுத்துக்காட்டு

அ) ஓடு ☐ ஆ) ஓடினர் ☐

இ) ஓடியது ☐ ஈ ) ஓடின ☐

15. சம்பந்தம் என்பதன் தூய தமிழ்ச்சொல்

அ) தொடர்பு ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) திருமணம் ☐ ஈ ) கொண்டாட்டம் ☐

16. தமிழ் மக்களிடையே நால்வருணப் பாகுபாட்டை ஏற்படுத்தியவர்கள்

அ) தமிழர் ☐ ஆ) பறங்கியர் ☐

இ) ஆரியர் ☐ ஈ ) சூத்திரர் ☐

17. ‘அத்து’ என்ற சொல்

அ) வேற்றுமை உருபு ☐ ஆ) சாரியை ☐

இ) உவமைஉருபு ☐ ஈ ) விகுதி ☐

18. ஒழுக்கக்கேடுகளில் மிகவும் இழிந்த கேடு

அ) அடக்கமின்மை ☐ ஆ) இன்னாசெய்தல் ☐

இ) புலால் உண்ணல் ☐ ஈ ) பிறனில்விழைதல் ☐

19. "புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்.... "என்று தொடங்கும் தென்றல் பற்றிய பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐
இ) பாவேந்தர் ☐ ஈ) நல்லத்துவனார் ☐

20. பொதுப்பெயரோடு சிறப்புப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நாகபாம்பு ☐ ஆ) தமிழ்மொழி ☐
இ) ஆசிரியர் பாரதி ☐ ஈ) வாழைப்பழம் ☐

21. உருபு ஏற்காத வேற்றுமைகள்

அ) 8 ☐ ஆ) 6 ☐
இ) 2 ☐ ஈ) 4 ☐

22. தேவாரகாலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்தவர்

அ) ஆறுமுகநாவலர் ☐ ஆ) ஔவையார் ☐
இ) சம்பந்தர் ☐ ஈ) வள்ளுவர் ☐

23. வி.பி என்பன ____________ விகுதிகள்.

அ) எச்சவினை ☐ ஆ) பிறவினை ☐
இ) வினைமுற்று ☐ ஈ) தன்வினை ☐

24. நேற்று நல்ல காற்று. இச் சொல்லியத்தில் தோன்றா உறுப்பு.

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐
இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

25. புன்கண் என்பது

அ) இன்பம் ☐ ஆ) ஆரவாரம் ☐
இ) குழிசி ☐ ஈ) துன்பம் ☐

26. வயலும் வயல் சார்ந்த நிலமும்

அ) குறிஞ்சி ☐ ஆ) முல்லை ☐
இ) நெய்தல் ☐ ஈ) மருதம் ☐

27. குன்றின் அருவிதாழ் மாலைச்சுனை ...... என்ற பாடலைப் பாடியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) பாவேந்தர் ☐
இ) நல்லத்துவனார் ☐ ஈ) பாரதியார் ☐

28. வீட்டுக்கு வெள்ளை அடித்தான் என்பது

அ) சினையாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐
இ) குணவாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

29. திருக்குறள் __________ அதிகாரங்களைக் கொண்டது.

அ) 133 ☐ ஆ) 1330 ☐
இ) 1300 ☐ ஈ) 123 ☐

30. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நுழைந்த வடபுலத்தார்

அ) சோழர் ☐ ஆ) களப்பிரர் ☐
இ) சேரர் ☐ ஈ) பாண்டியர் ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இன்று இலங்கையில் தமிழ்மாணவரின் கல்வி சீரழிந்து போய்க் கிடக்கிறது. பாடத்திட்டங்களில் பண்டைய தமிழ் மன்னர்கள், குறுநில அரசர்கள், தமிழருக்காகக் குரல் கொடுத்த தமிழ் அறிஞர்கள் போன்றோரின் வரலாறுகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன. தமிழரின் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த எல்லாளன், குளக்கோட்டன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற எந்தவொரு தமிழ் மன்னரின் வரலாறும் இப்போது தமிழ்ப்பாடநூல்களில் இல்லை. மாறாக விசயன் தொடக்கம் இன்று வரையான சிங்கள மன்னர்கள், சிங்களத்தலைவர்களின் வரலாறுகள் வீரதீரச் செயல்கள் போன்றவையே தமிழ்மாணவரின் பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவும் தமிழ்மக்களுக்கு எதிராகச் சிங்கள அரசு திட்டமிட்டு அரங்கேற்றும் ஒருவகையான இனவழிப்புச் செயற்பாடாகும். இது போன்ற இனவழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். புலம்பெயர்ந்து வாழும் கல்விமான்கள், தமிழ் அறிஞர்கள் ஒன்றுகூடி ஈழத்துத் தமிழ்மாணவரின் கல்வி தொடர்பாக தீராய்வு செய்தல் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

1. மேலே கூறப்பட்ட இனவழிப்புச் செயற்பாடு யாரால் யாருக்கு எதிராகச் செயற்படுத்தப்படுகிறது?

________________________________________

________________________________________

2. எவை தமிழ்ப்பாடநூல்களில் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன?

________________________________________

________________________________________

3. எம்மன்னர்களின் வரலாறுகள் தமிழ்ப்பாடநூல்களில் இல்லை?

________________________________________

________________________________________

4. எவை தமிழ்மாணவரின் பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன?

________________________________________

________________________________________

5. ஈழத்துத் தமிழ்மாணவரின் கல்வி தொடர்பாக தீராய்வு செய்யவேண்டியோர் யாவர்?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரிய ஏமாற்றுக் கொள்கைகளை எதிர்த்த கவிஞன் யார்?

2. பாலை என்ற வரண்ட நிலம் எவ்வாறு தோன்றும்?

3. போரில் எழுவரை வென்ற இளைஞன் யார்? இப்போர் நடைபெற்ற இடம் எது?

4. தமிழில் தன்னிகரற்ற காப்பியம் எது?

5. ''யாரிடம் செல்வம் சேர்வதில்லை'' என்று வள்ளுவர் கூறுகிறார்?

6. சோழமன்னன் கலிங்கநாட்டை வெற்றி கொண்ட போரை பற்றிக் கூறும் நூல் எது?

7. **குறள்:** பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
   தேரினும் அஃதே துணை

   இக்குறளின் பொருளைத் தருக.

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



புலவர்கள் வளர்த்த மொழி!
புலத்திலும் வாழும் மொழி!

புள்ளிகள் 10



TEDC

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. ஒவ்வொன்றுக்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

நெடிற்றொடர்க்குற்றியலுகரம் ________________ ________________

இடைத்தொடர்க்குற்றியலுகரம் ________________ ________________

வன்தொடர்க்குற்றியலுகரம் ________________ ________________

2. அ) வந்தனர் என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

________________________________

ஆ) பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

4 ஆம் வேற்றுமை ________________________________

7 ஆம் வேற்றுமை ________________________________

3. பின்வருவன எவ்வகைத் தொகைகள்

வளர்மதி ________________________________

கயல்விழி ________________________________

முக்குணம் ________________________________

4. பின்வரும் உவமையணிகளை உருவக அணிகளாக மாற்றி எழுதுக.

கடல் அறிவு ________________________________

தேன்மொழி ________________________________

பவளவாய் ________________________________

5. இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்? ________________

எடுத்துக்காட்டுத் தருக.

திரிசொல் ________________________________

திசைச்சொல் ________________________________

புள்ளிகள் 15



TEDC

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

இவ்வுலகிலே பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் மாந்தன் தனக்குரிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றான். தான் உற்பத்தி செய்யும் உணவுகள் தனக்கு மட்டுமன்றி பிற உயிர்களும் பயன்பெறும் வகையில் செயற்படுகிறான். அதே போன்றே தான் ஈட்டும் பொருட்களை தனக்கு மட்டுமல்லாமல் அவை பிறருக்கும் பயன்படும் வகையில் கொடுத்து உதவ வேண்டும். உணவுகளை விளைவித்துத் தருவதோடு, தானே உணவாகவும் இருக்கும் சிறப்பு மழைக்கு உண்டு. எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி எமக்கு வாரி வழங்கும் மழையைப் போல, எம்மால் பிறருக்கு வழங்க முடியாவிட்டாலும், எம்மால் முடிந்தளவு பிறருக்குச் சிறு உதவியாவது செய்ய வேண்டும். இச்செயலானது எமது எதிர்காலத்தை மேலும் சிறப்புடையதாக்கும். ஆனால், நாம் பிறருக்கு உதவும் போது பிறரின் தேவை அறிந்து உதவுவதே உண்மையான உதவியாகும். இதனை வள்ளுவரும்,

''வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து''

என்று கூறியுள்ளார். அதாவது வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவருக்குக் கொடுப்பது பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். கொடுத்தார்க்குக் குறைவில்லை என்ற முதுமொழிக்கிணங்க, நாம் இல்லாதவர்களுக்கு உதவி நாமும் வாழ்வோம். பிறரையும் வாழ வைப்போம். இதுவே உலக நீதி.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 5

TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தென்றல்வரவு
- ✸ தொற்று நோய்களும் அவற்றைத் தடுக்கும் வழிகளும்.
- ✸ மாவீரர் நாள்.

புள்ளிகள் 20

TEDC